**Teachers Eligibility Test – Paper 2**

**iv. Language I - 1. Tamil**

## ஆறாம் வகுப்பு

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 1. உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல், மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், விவரித்தல், தானே கற்றல் | **இயல் – 1**<br>**செய்யுள்**<br>வாழ்த்து<br>திருக்குறள்<br>**உரைநடை**<br>தமிழ்த்தாத்தா உ.வே.சா.<br>**துணைப்பாடம்**<br>கடைசிவரை நம்பிக்கை<br>**இலக்கணம்**<br>இணை எழுத்துக்கள் அறிதல், குறில், நெடில் அறிதல்<br>**மொழித்திறன் பயிற்சி**<br>குறில், நெடில் வேறுபாட்டை எடுத்துக்காட்டத்தக்க வாக்கியங்கள்.<br>ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு எழுத்துகள் கொண்ட வாக்கியங்கள், சொற்றொடர்கள், இன எழுத்துகள் கொண்ட வாக்கியங்கள், சொற்றொடர்கள், சொற்கள் அறிதல். | ஒலிப்புப் பயிற்சிக்கான உரைநடைப் பகுதியைக் குறிப்பிட்டு உரிய நிறுத்தத்துடன் படிக்கச் செய்தல். கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி ஆகியவற்றைக் கவனித்துப் படிக்கப் பழக்குதல்.<br>செய்யுள், உரைநடைப் பகுதியைக் கொடுத்து, அவற்றின் பொருளடக்கத்தை வெளிப்படுத்துமாறு வினாக்களை உருவாக்கும் பயிற்சி : அறிவுரைப் பகுதியில் அறிவுரைகள் (விழுமியங்கள்) வெளிப்படுமாறான வினாக்கள். எடுத்துக்காட்டாக சில வினாக்கள் கொடுத்து, அவற்றைப் போன்ற பிற வினாக்களை உருவாக்கும் பயிற்சி.<br>சில சொற்களில், விடைகள் வரத்தக்க வினாக்கள் அமைக்கப் பயிற்சி அளித்தல்.<br>உரைநடைப் பத்தியைக் கொடுத்து அதன் மையப் பொருள் மாறாதவாறு குறிப்புச் சட்டகம் தயாரித்தல். சில எடுத்துக்காட்டுகளைக் கொடுத்து அவற்றைப் போன்று பாடப் பகுதியிலுள்ள பகுதிகளுக்குக் குறிப்பு எழுத பயிற்றுவித்தல்.<br>குறிப்புச் சட்டகம் கொடுத்து விரித்து |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | எழுதும் பயிற்சிகள் கொடுத்தல்.<br>கொடுக்கப்பட்டுள்ள செய்யுள், உரைநடைப் பகுதி சார்ந்த விழுமியங்கள், நடைமுறை வாழ்க்கைப் பிரச்சினை தொடர்பான வினாக்களைக் கொடுத்து விடை எழுதச் சொல்லுதல்.<br>குறில், நெடில் வேறுபாடுகளை எடுத்துக்காட்டத்தக்க சொற்றொடர்களை எழுதும் பயிற்சி. (எ–டு) வில் இசையும் வீணை இசையும் . . . . . . .<br>ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு உடைய சொற்கள் உடைய சொற்றொடர்களை எழுதுதல். (வெட்டவெளி, வேகாதசோறு. . )<br>வல்லின, மெல்லின, இடையின வரிசையைக் காட்டும் சொற்களை எழுதுதல், (கட்டை, சட்டை, தட்டை, பட்டை) |
| 2. மொழி ஆளுமைத் திறன்: சொற்போரில் பங்கேற்று, உரிய உணர்வோடு பேசுதல். | **இயல் – 2**<br>**செய்யுள்**<br>நாலடியார்<br>பாரத தேசம்<br>**உரைநடை**<br>பறவைகள் பலவிதம்<br>**துணைப்பாடம்**<br>பாம்புகள் – ஓர் | கற்றல் பகுதியிலுள்ள செய்யுள்களை மேற்கோள்காட்டிச் சொற்பொழிவு தயாரித்தல்.<br>பறவைகளின் செயல்கள், பழக்கங்கள் முதலியன பற்றிக் கலந்துரையாடல்.<br>உரையாடல் பகுதியைச் சுருக்கி எழுதுதல்.<br>உரையாடலை மாணவர்களைக் |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
| --- | --- | --- |
| | உரையாடல்<br>**இலக்கணம்**<br>குறில், நெடில் உண்டாவது எப்படி ?<br>எழுத்துகளும் உறவும்<br>**மொழித்திறன் பயிற்சி**<br>எண், எண்ணுக்குரிய எழுத்து வடிவம், சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுதல், தன் இனவெழுத்துடன் மட்டும் சேரும் எழுத்துகள் | கொண்டே நிகழ்த்துதல்<br>குறில், நெடில் சொல்லாக்கப் பயிற்சிகள்<br>இனவெழுத்துகள் அமைவது போன்ற சொற்களை எழுதுதல். (சங்கம், தங்கம், வங்கம்...) (உடனிலை மெய்ம்மயக்கச் சொற்கள், பக்கம், பாக்கம்)<br>பாடப் பகுதியிலுள்ள சொற்களைப் பிரித்தும், சேர்த்தும் எழுதும் பயிற்சி. (வல்லொற்று மிகுவதாக அமையும் எடுத்துக்காட்டுகள் மட்டும்) |
| 3. கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவத்துடன், நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி எழுதுதல், சிந்தனைத் திறன் அறிதல் | **இயல் – 3**<br>**செய்யுள்**<br>நான்மணிக்கடிகை<br>**உரைநடை**<br>ஆராரோ ஆரிரரோ<br>**துணைப்பாடம்**<br>வீரச் சிறுவன்<br>**இலக்கணம்**<br>சொற்களின் வகைகள் – பெயர்ச் சொல், வினைச் சொல் அறிமுகம்<br>**மொழித்திறன் பயிற்சி**<br>ஒற்றுப் பிழை, மயங்கொலிப் பிழை, பெயர்ச் சொல், வினைச் சொல் போன்றவற்றை | கற்றல் பகுதியிலுள்ள செய்யுள்களை மேற்கோள்காட்டி அறவுரை, வருணனைக் கட்டுரை எழுதும் பயிற்சியளித்தல்.<br>கற்றல் பகுதியிலுள்ள உரைநடைப் பாடங்களில் எடுத்தாளப்பட்டுள்ள நிறுத்தக் குறிகளை எடுத்தெழுதுதல். அவற்றின் தேவையினைப் பற்றியும், நிறுத்தக் குறிகள் இடாததால் ஏற்படும் பொருள் மயக்கத்தையும் எடுத்துக் காட்டுதல்.<br>பெயர்ச்சொல், வினைச்சொல் வேறுபாட்டை விளக்கத் தக்க பயிற்சியளித்தல்.<br>வினைச்சொற்களிலிருந்து, பிறவகைச் சொற்களை வருவிக்கும் பயிற்சி.<br>வல்லொற்றுப் பிழை (இரண்டாம் |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
| --- | --- | --- |
| | அறியச் செய்தல் | வேற்றுமை தொகை, விரி)<br>எழுத்து மாற்றத்தால் பொருள் மாறுபடுவதை எடுத்துக்காட்டும் பயிற்சியளித்தல். |
| 4. பகுதியைப் படித்துக் கருத்துகளைத் தொகுத்து, வகைப்படுத்தி, வெளிப்படுத்த அறிதல்.<br>புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்கள், ஆகியனவற்றை வெளிப்படுத்துதல் | **இயல் – 4**<br>**செய்யுள்**<br>இசையமுது<br>பழமொழி நானூறு<br>**உரைநடை**<br>மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதம்<br>**துணைப்பாடம்**<br>ஊர்த் திருவிழா – ஒரு கலைவிழா<br>**இலக்கணம்**<br>இரட்டைக்கிளவி<br>**மொழித்திறன் பயிற்சி**<br>இரட்டைக்கிளவி<br>ஒற்றைக் கொம்பு, இரட்டைக்கொம்பு, குறில், நெடில் வேறுபாடு அறிதல் | கற்றல் பொருளாக உள்ள பாடலில் ஒவ்வொரு பகுதியும் வெளிப்படுத்தும் பொருளைத் தலைப்பாகக் கொண்டு சிறுசிறு பகுதிகள் எழுதுதல். (எடுத்துக்காட்டு: மழை அமுதம், மழையொலி, உழவரும் மழையும். செய்யுளை மேற்கோள்காட்டி எழுதச் செய்தல்).<br>படங்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் குறித்துத் தனித்தனியே விவரித்து எழுதும் பயிற்சியளித்தல். (எ–டு) காவல் தெய்வம், கரகாட்டம், பொங்கல்.<br>ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர் எழுதும் பயிற்சியளித்தல்.<br>ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு மாற்றத்தைச் சொற்களில்காட்டிப் பொருள்மாற்றத்தைச் சுட்டும் பயிற்சியளித்தல்..<br>கற்றல்பகுதி உரைநடையில் உள்ள பிறமொழிச் சொற்களை எடுத்தெழுதும் பயிற்சிளித்தல். (எ–டு. முக்கியத்துவம், நாவல். . . .)<br>குறில், நெடில் வேறுபாட்டால் பொருள் மாறுபடுவதை விளக்கும் பயிற்சியளித்தல். |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 5. வரலாற்று நிகழ்வுகளை நினைவு கூறல் மற்றும் மனிதஉறவின் பெருமையினை விளக்குதல் | **இயல் – 5**<br>**செய்யுள்**<br>சித்தர் பாடல்<br>தாகம் – புதுக் கவிதை<br>**உரைநடை**<br>இளமையில் பெரியார் கேட்ட கேள்வி<br><br>**துணைப்பாடம்**<br>தங்கமாம்பழமும் சூட்டுக்கோலும்<br>**இலக்கணம்**<br>பிழைகளைக் களைதல்<br>**மொழிப்பயிற்சி**<br>பிழைகளைக் களைதல் – ஒற்றுப் பிழைகள், குறில், நெடில் பிழைகள், துணை எழுத்துப் பிழைகள், மயங்கொலிப் பிழை, சொற்களுடன் 'உம்' சேர்த்து எழுதுதல் | குடியாட்சி, முடியாட்சிக் காலங்களின் வாழ்க்கை முறை பற்றி விவாதித்தல்.<br>மூடநம்பிக்கையால் ஏற்படும் கேடுகள் பற்றி விவாதித்தல்.<br>சித்தர் பாடலில் காணப்படும் பகுத்தறிவுக் கருத்துகளைக் குறித்து விவாதித்தல், மறுமலர்ச்சிக் கருத்துகளை எடுத்துக்காட்டுதல்.<br>ஒற்றுப்பிழை நீக்கும் பயிற்சியளித்தல்.<br>குறிலை நெடிலாகவும் நெடிலைக் குறிலாகவும் மாற்றிச் சொற்களை உருவாக்குதல்<br>மனித உறவுகளின் மேன்மையினை விளக்கும் நிகழ்ச்சிகளைத் தொகுத்தல்.<br>வரலாற்று நிகழ்ச்சிகளால் பெறத்தக்க படிப்பினைகளைப் பற்றிச் சிந்தித்துத் தீர்வு கூறும் பயிற்சியளித்தல். |
| 6. உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல், நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும், சுவைபடவும் கூறுதல், எழுதுதல் | **இயல் – 6**<br>**செய்யுள்**<br>புறநானூறு<br>திண்ணையை இடித்துத் தெருவாக்கு – புதுக் கவிதை | புறநானூற்றுச் செய்யுள் கருத்தை வெளிப்படுத்துமாறு உரையாடல் எழுதப் பயிற்றுவித்தல்.<br>அறிவிப்பு வடிவச் சொற்றொடர்களை எழுதுதல். அறிவிப்புச் சொல்லாட்சிகளைப் பிறவற்றிலிருந்து வேறுபடுத்தும் |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
| --- | --- | --- |
| | **உரைநடை**<br>தேசியம் காத்த செம்மல்<br>**துணைப்பாடம்**<br>எது பெரிய உண்மை ?<br>**இலக்கணம்**<br>சுட்டெழுத்து<br>**மொழித்திறன் பயிற்சி**<br>சுட்டெழுத்துக்கள், அ, இ, உ அறிமுகம் | பயிற்சிகள் வழங்கல்.<br>செய்தி, வினா முதலிய சொற்றொடர் வகைகளில் வெளிப்படும் தகவல்களைச் சுவையூட்டத்தக்கவாறு வருணனை, அடைச் சொற்களைப் பயன்படுத்தப் பயிற்றுவித்தல்.<br>நிரல்பட அமைந்த நிகழ்ச்சிகளின் வரிசைமுறையை மாற்றிச் சுவைபடக் கூறும் உத்திகளைக் காட்டும் பயிற்சிகள்அளித்தல். (பின்னோக்கு, கதைமாறாமல் கூறுதல் முதலியன)<br>செய்யுள் சுவைபட அமைவதற்கான சொல்லாட்சிகளை அடையாளப்படுத்துதல்.<br>சுட்டெழுத்துக்கள் மொழியில் பயன்படும் தன்மையினை விளக்கும் பயிற்சிகள் |
| 7. பல்துறை அறிவு பெறுதல். (சித்த மருத்துவம், நுண் கலைகள், விளையாட்டு, இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள்) புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல், மறுப்புத் திறன் அறிதல் | **இயல் – 7**<br>**செய்யுள்**<br>திருக்குறள் – இனியவை கூறல்<br>**உரைநடை**<br>கல்லிலே கலைவண்ணம்<br>**துணைப்பாடம்**<br>சாதனைப் பெண்மணி<br>**இலக்கணம்**<br>அளபெடை, திணை, பால் | அறிவியல் கண்டுபிடிப்புத் தொடர்பான பொது அறிவை எடுத்தெழுதத் தக்க தலைப்புகளைக் கொடுத்துத் தொடர்புடைய கண்டுபிடிப்புகளையும் கண்டுபிடித்த அறிவியல் அறிஞர்களைப் பற்றியும் எழுதச் செய்தல்.<br>அறிவியல் கலைச் சொல்லாக்கப் பயிற்சி. எளிய சொற்கள், சொல்லாக்க முறை அறிமுகம்.<br>பிறமொழிச் சொல்லாட்சியைத் தவிர்த்துச் சொற்றொடர்களைச் |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | **மொழித்திறன் பயிற்சி**<br>அளபெடை – உயிர் அளபெடை, ஒற்றளபெடை<br>திணை – உயர்திணை, அஃறிணை<br>பால் – ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் | செம்மையாக எழுதும் பயிற்சி.<br>சொற்களின் வகைப்பாட்டை அறியத்தக்க பயிற்சிகள் (எ–டு) பெயர், எச்சம், வினை போன்றன) இலக்கணப் பெயர்களை அறிமுகப்படுத்தாமல், வேறுபட்ட அமைப்புகளை அடையாளம் காணுதல்.<br>‘அளபெடை’ச் சொல்லாட்சியின் நடைமுறைப் பயன்பாட்டைத் தெரிவிக்கும் எடுத்துக்காட்டுகள் தருதல். |
| 8. மொழி நயம் அறிதல். உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒருசொல் அறிதல், சொற்களஞ்சியம் பெருக்குதல் | **இயல் – 8**<br>**செய்யுள்**<br>தனிப்பாடல்<br>அந்தக் காலம் இந்தக் காலம்<br>**உரைநடை**<br>தயக்கம் இன்றித் தமிழிலேயே பேசுவோம்<br>**துணைப்பாடம்**<br>நாடும் நகரமும்<br>**இலக்கணம்**<br>மாத்திரை, எண், இடம்<br>**மொழித்திறன் பயிற்சி**<br>மாத்திரை அளவுகள்<br>எண் – ஒருமை, பன்மை<br>இடம் – தன்மை, முன்னிலை, படர்க்கை | உரைநடை, செய்யுள் வடிவம், கற்றல் பனுவல்களின் சுவைக்குரிய மொழிக் கூறுகளைத் தேர்ந்தெடுக்கும் பயிற்சி<br>செய்தியின் உவமை, பழமொழி, மரபுத்தொடர் முதலியனவற்றை மாற்றியமைத்து எழுதும் பயிற்சி<br>மொழிவளக் கூறுகளான தொகைச் சொற்களை, ஒரு சொல் பல்பொருள், ஒரு பொருள் பலசொல் முதலியன கொண்ட பனுவல்களை உருவாக்கும் பயிற்சியளித்தல்.<br>ஓர் அடிச்சொல்லைக் கொண்டு பல்வகையான சொற்களை உருவாக்கும் பயிற்சியளித்தல்.<br>இலக்கணப் பகுதியினை இயல்பு முறையில் அறிந்து கொள்ளும் பயிற்சிகளை அளித்தல். |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 9. நயம் பாராட்டுதல், படைப்பாற்றல் | **இயல் – 9**<br>**செய்யுள்**<br>குற்றாலக் குறவஞ்சி<br>சிலேடைப் பாடல்<br>**உரைநடை**<br>எது பண்பாடு ?<br>**துணைப்பாடம்**<br>வணக்கம் ஐயா!<br>**இலக்கணம்**<br>காலம் அறிதல்<br>**மொழிப் பயிற்சி**<br>காலம் – இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் | செய்யுள் நயக் கூறுகளைப் பட்டியலிடுதல்<br>ஒலி, சொல், பொருள் நயக்கூறுகளை வெளிப்படுத்தத்தக்க தொடர்கள், சொல் தொகுதிகளை எழுதும் பயிற்சி.<br>நடைமுறைக்குத் தேவையான முத்திரை சொற்றொடர்கள் (விளம்பரத் தன்மையுடையவை) எழுதுதல். (எ–டு: நாளும் கற்போம் ; மேலும் உயர்வோம்)<br>செம்மொழிச் சிலேடை அமையுமாறான சொற்களை எழுதப் பயிற்சியளித்தல்<br>வினை வடிவங்களை மாற்றும் பயிற்சியளித்தல். |

## ஏழாம் வகுப்பு

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 1. உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல், மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், விவரித்தல், தானே கற்றல், சிந்தனைத் திறன் அறிதல் | **இயல் – 1**<br>**செய்யுள்**<br>வாழ்த்து, திருக்குறள்<br>**உரைநடை**<br>**செம்மொழித் தமிழ்**<br>**துணைப்பாடம்**<br>ஊரும் பேரும்<br>**இலக்கணம்**<br>சார்பெழுத்துகளின் வகைதொகை.<br>**மொழித்திறன் பயிற்சி** | • பல்வேறு நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தப் பயிற்சியளித்தல். (பயிற்சிக்கான பகுதி கற்றல் பனுவலிலிருந்தும், பனுவல் சாராதனவாகவும் அமையும்)<br>• திருக்குறள் பகுதியிலுள்ள ஒவ்வொரு குறளின் கருத்தையும் சில சொற்களில் கூறும் பயிற்சி (எ.கா) வாய்மை எனப். . . .                . . . . . . . . . . . . . . .சொல் – தீமையற்ற சொல்லே வாய்மை<br>• சில சொற்கள் விடையாக வரத்தக்க வினாக்கள் அமைத்தல். |

| திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
| --- | --- | --- | --- |
| | | | • சார்பெழுத்துகளுக்கு எடுத்துக்காட்டுகளைக் கொடுத்து பெயர்களை எழுதும் பயிற்சியளித்தல்.<br>• வல்லினம் மிகுதற்கான எடுத்துக்காட்டுகள் எழுதும் பயிற்சியளித்தல். |
| 2. | மொழி ஆளுமைத் திறன் சொற்போரில் பங்கேற்று, ஏற்ற இறக்கங்களுடன் பேசுதல், எழுதுதல் | **இயல் – 2**<br>**செய்யுள்**<br>புறநானூறு, முதுமொழிக்காஞ்சி<br>**உரைநடை**<br>மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>சார்பெழுத்துகள் – உயிர்மெய், ஆய்தம்<br>**மொழித்திறன் பயிற்சி** | • உரைநடைப் பகுதிகளுக்கு ஏற்ற துணைத் தலைப்பு எழுதப் பயிற்சியளித்தல்.<br>• சொற்போருக்கான பகுதிகளை எழுதும் பயிற்சியளித்தல்.<br>• கருத்தை ஏற்கும், மறுக்கும் உத்திகளை எடுத்துக்காட்டுதல்.<br>• உணர்வுகளுக்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்தெடுக்கும் பயிற்சி<br>• கற்ற செய்யுள் பகுதியை மேற்கோள்காட்டி, மேடைப் பேச்சு தயாரித்தல்.<br>• துணைப்பாடப் பகுதியிலிருந்து, விழுமியங்களை |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | | வெளிப்படுத்தும் விளக்கக் குறிப்புத் தயாரித்தல்.<br>• கொடுக்கப்பட்ட குறிப்பு அடிப்படையில் தமிழரின் பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்தும் பயிற்சி. |
| 3. | பகுதியைப் படித்துக் கருத்துகளைத் தொகுத்து, வகைப்படுத்தி, வெளிப்படுத்த அறிதல். புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்கள் அறிதல், மறுப்புத் திறன் அறிதல் | **இயல் – 3**<br>**செய்யுள்**<br>திரிகடுகம்<br>**உரைநடை**<br>கணிதமேதை இராமானுசம்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>நால்வகைச்சொற்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | • செய்யுள் கருத்தினை வகைப்படுத்திக் கூறும் பயிற்சி. (எ–டு) மனத்தின் தன்மை, மொழியின் தன்மை, மெய்யின் தன்மை – செய்யுள்களைப் பொருத்திக் காட்டுதல்.<br>• உரைநடைப் பகுதியிலுள்ள பிறமொழிச் சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்கள் உருவாக்கும் பயிற்சி.<br>• துணைப்பாடப் பகுதியிலிருந்து, இணைச் சொற்கள், புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள் முதலியனவற்றைப் பட்டியலிடச் செய்தல்.<br>• தலைப்பு ஒன்றைத் |

| திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | | தந்து, அதற்கு வலு சேர்க்கக் கூடிய கருத்துகளைத் தொகுக்கும் பயிற்சி.<br>• நால்வகைச் சொற்களைப் பிரிக்கும் பயிற்சி |
| 4. | கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவத்துடனும், நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தியும் எழுதுதல், மனித உறவுத் திறன் அறிதல் | **இயல் – 4**<br>**செய்யுள்**<br>தனிப்பாடல்<br>**உரைநடை**<br>காந்தியடிகள் கடிதம்<br><br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும்<br>**மொழித்திறன் பயிற்சி** | • பொருளுடைய சொற்களை அடையாளம் காணும் பயிற்சி.  அவற்றைப் பொருத்தமாக சொற்றொடரில் அமைத்தல்.<br>• பல்வேறு சூழல்களில் எழுதப்படும் விண்ணப்பங்கள் பற்றிய அறிமுகம் ; விண்ணப்பங்கள் எழுதுதல்.<br>• கதைகளிலிருந்து பெறத்தக்க அறிவுரைகளைப் பட்டியலிட்டுப் பிற எடுத்துக்காட்டுகள் தருதல்.<br>• முழக்க சொற்றொடர்களைக் கொடுத்துப் |

| திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | | பொருத்தமான வரலாற்று நிகழ்ச்சியை எழுதும் பயிற்சி.<br>• பெயர்ச் சொற்களை வகைப்படுத்தும் பயிற்சி<br>• |
| 5. | வரலாறு, பண்பாடு அறிதல் | **இயல் – 5**<br>**செய்யுள்**<br>திருவாரூர் நான்மணிமாலை, வாணிதாசன் பாடல்<br>**உரைநடை**<br>தூங்கா நகர்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>அறுவகைப் பெயர்ச்சொற்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | • செய்யுள் பொருட் பின்னணியை வெளிப்படுத்தும் பயிற்சி.<br>• செய்யுள் வெளிப்படுத்தும் அறிவுரையினை விளக்கும் பயிற்சி.<br>• படித்த செய்யுள்களை மேற்கோள்படுத்தி, சொற்போர் தயாரித்தல்.<br>• துணைப்பாடப் பகுதியிலுள்ள வரலாற்றுக் குறிப்புகளை விளக்குமாறு தகவல்களைத் திரட்டுதல்.<br>• அறுவகைப் பெயர்களை வகைப்படுத்தும் பயிற்சி |
| 6. | உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல், நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும், | **இயல் – 6**<br>**செய்யுள்**<br>மருதகாசியின் பாடல்,<br>ந. பிச்சமூர்த்தியின் கவிதை | • கவிதை வரிகளை மேற்கோள்படுத்தி உரையாடல் எழுதுதல்.<br>• கவிதை வரிகளுக்குப் |

| திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | சுவைபடவும் கூறுதல், எழுதுதல் | **உரைநடை**<br>நெசவு – நாடகம்<br>**துணைப்பாடம்**<br>தமிழ் நாடக முன்னோடிகள்<br>**இலக்கணம்**<br>வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்<br>**மொழித்திறன் பயிற்சி** | பொருத்தமான முழக்க வாக்கியங்கள் எழுதுதல்.<br>• வாழ்க்கை வரலாற்றுச் சிறப்பை விளக்கும் மேற்கோள் செய்யுள்களை எடுத்துக்காட்டுதல்.<br>• சொல் வடிவ மாற்றுப் பயிற்சி<br>• பிறமொழிச் சொற்களுக்குத் தமிழ் சொற்கள் ஆக்கப் பயிற்சி. |
| 7. | பல்துறை அறிவு பெறுதல். (சித்த மருத்துவம், விளையாட்டு, இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள்) புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல் | **இயல் – 7**<br>**செய்யுள்**<br>திருக்குறள், முக்கூடற் பள்ளு<br>**உரைநடை**<br>இயற்கை வேளாண்மை – நேர்காணல்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>வேற்றுமை, அடைமொழி<br>**மொழித்திறன் பயிற்சி** | • பல்துறைகளில் பயன்படும் சொற்கள் உருவாக்குதல்<br>• அறிவியல் கண்டுபிடிப்புகள் தொடர்பான செய்திகளைச் சிறுசிறு தலைப்புகளில் எழுதுதல்.<br>• இயற்கை வேளாண்மைப் பற்றிய சிறப்புகளைச் சிறுசிறு தலைப்புகளில் எழுதும் பயிற்சி. |
| 8. | மொழி நயம் அறிதல். (உவமைகள், பழமொழிகள், | **இயல் – 8**<br>**செய்யுள்** | • கற்றல் பனுவலிலுள்ள மொழிநயக் கூறுகளை |

| திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | மரபுத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒரு சொல் அறிதல்) | தனிப்பாடல், தாலாட்டுப் பாடல்<br>**உரைநடை**<br>தமிழகத்தின் அன்னிபெசண்ட்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>மூவகைப்போலிகள்<br>**மொழித்திறன் பயிற்சி** | வெளிப்படுத்தும் பயிற்சி.<br>• கற்றல் பனுவலை, உவமை, பழமொழி, மரபுத்தொடர் இணைத்துச் சுவைபட மாற்றி எழுதும் பயிற்சி.<br>• துணைப்பாடப் பகுதியில் உள்ள செய்திகளைச் சிறுசிறு தலைப்பிற்குள் எழுதுதல்.<br>• கற்றல் பனுவலில் உள்ள மொழிவளக் கூறுகளை அடையாளப்படுத்துதல். அவற்றைப் பயன்படுத்தி சொற்றொடர்கள் எழுதுதல்.<br>• பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் எழுதுதல்.<br>• மொழிப் போலிகளுக்கான எடுத்துக்காட்டுகள் தருதல். |
| 9. | சொற்களஞ்சியம் பெருக்குதல் | **இயல் – 9**<br>**செய்யுள்**<br>அம்மானை, சீவகசிந்தாமணி<br>**உரைநடை** | • கற்றல் பனுவலில் உள்ள புதிய சொற்களைப் பட்டியலிடுதல்.<br>• பட்டியலிட்ட சொற்களை வகைப்படுத்துதல் |

| திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | தமிழக விளையாட்டுகள்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>சொல்<br>**மொழித்திறன் பயிற்சி** | • சொற்களை<br>• இலக்கணம்<br>• துறை<br>• அமைப்பு<br>• மொழி<br>என வகைப்படுத்துதல். |
| 10 | நயம் பாராட்டுதல்,<br>படைப்பாற்றல் | **இயல் – 10**<br>**செய்யுள்**<br>பாரதிதாசன் பாடல்<br>கம்பர் பாடல்<br>**உரைநடை**<br>ஓவியக்கலை<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>அணியிலக்கணம்,<br>நிறுத்தற்குறிகள்<br>**மொழித்திறன் பயிற்சி** | • செய்யுள் நயம் பாராட்டல் பயிற்சி<br>• நயக் கூறுகளைப் பட்டியலிடல்<br>• கற்றல் பனுவல் தொடர்பான செயல்களை நயம்பட உரைக்கத்தக்க பழமொழிகள், மரபுத்தொடர்கள், முழக்கத்தொடர்கள் தயாரித்தல்.<br>• ஓவியக்கலை தொடர்பான சொற்களைத் திரட்டுதல்.<br>• அணிகளை விளக்கும் எடுத்துக்காட்டுச் செய்யுள்கள்<br>• தலைப்புகளுக்கேற்ப மன வரைபடம் வரைதல். |

## எட்டாம் வகுப்பு

| திறன் | | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 1. | உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல், மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், விவரித்தல், தானேகற்றல், சிந்தனைத் திறன் அறிதல் | **இயல் – 1**<br>**செய்யுள்**<br>வாழ்த்து, திருக்குறள்<br>**உரைநடை**<br>உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டுச் சிறப்புகள்<br>**துணைப்பாடம்**<br>சி.யு. போப்பு<br>**இலக்கணம்**<br>குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம்<br>**மொழித்திறன் பயிற்சி** | தாயுமானவரின் பொதுவான கடவுட்கொள்கை வெளிப்படுமாறு கற்பித்தல்; திருக்குறட்கருத்துகளை மாணாக்கர் உளங்கொளத்தக்க கதைகள் – நிகழ்வுகள் தந்து கற்பித்தல்; செம்மொழி மாநாடு தொடர்புடைய குறிப்புகள் கொடுத்துக் கட்டுரை வரையச் செய்தல். துணைப்பாடக் கட்டுரையை மாணாக்கர் தாமே படிக்கவும், குறிப்பெடுக்கவும் பயிற்றுதல். |
| 2. | மொழி ஆளுமைத் திறன், விவாதங்களில் பங்கேற்று ஏற்ற இறக்கங்களுடன் | **இயல் – 2**<br>**செய்யுள்**<br>இனியவை நாற்பது, | செய்யுள் தரும் பொருள் உணர்வுக்கேற்பக் குரல் ஏற்றத் தாழ்வுடன் படிக்கக் |

| திறன் | | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | பேசுதல், எழுதுதல், சிந்தனைத் திறன் அறிதல் | அயலகக்கவிஞர் பாடல்<br>**உரைநடை**<br>அகரமுதலி வரலாறு<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>இலக்கியவகைச் சொற்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | கற்பித்தல், அகரமுதலி அமைப்புப் பற்றிச் சிந்தனையைத் தூண்டல் ; இலக்கிய வகைச் சொற்களுக்கான எடுத்துக்காட்டுகளைப் பாடநூலில் உள்ள பாடப்பகுதி வழிக் கற்பித்தல். |
| 3. | பகுதியைப் படித்துக் கருத்துகளைப் பகுத்தும், தொகுத்தும், வகைப்படுத்தியும், வெளிப்படுத்த அறிதல். புதிய சொற்கள், பிற மொழிச் சொற்கள், இணைச் சொற்கள் அறிதல் | **இயல் – 3**<br>**செய்யுள்**<br>திருவள்ளுவ மாலை, நளவெண்பா<br>**உரைநடை**<br>உலகம் உள்ளங்கையில்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>வழக்கு<br>**மொழித்திறன் பயிற்சி** | செய்யுட் பகுதியின் கருத்துகளை மாணாக்கர் தொகுத்துக் கூற வழிகாட்டுதல். உரைநடைப் பாடத்தை மையமாகக் கொண்டு புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்களை மாணாக்கரே இனங்காணுமாறு பயிற்றல். செறிவினை, முரணிணைச் சொற்களைப் பட்டியலிடச் செய்தல். |
| 4. | கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவிலும், முறையிலும், நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தி எழுதுதல், | **இயல் – 4**<br>**செய்யுள்**<br>விவேகசிந்தாமணி, பாரதத்தாய்<br>**உரைநடை** | செய்யுள் நயம் உணர்த்துவதோடு மையக் கருத்தினை மாணாக்கரே கூறுமாறு பயிற்றல் ; உரைநடைச் செய்திகளைக் |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | மறுப்புத் திறன் அறிதல் | இந்திய விடுதலைப் போரில் தமிழகப் பெண்களின் பங்கு<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>தொகைநிலைத் தொடர்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | கட்டுரை, கடிதம் வாயிலாகத் தெரிவிக்கக் கற்பித்தல்; விதி வருமுறையில் தொகைநிலைத் தொடர்களைக் கற்பித்தல். |
| 5. | வரலாறு, பண்பாடு அறிதல் | **இயல் – 5**<br>**செய்யுள்**<br>காவடிச் சிந்து,<br>விக்கிரமசோழன்உலா<br>**உரைநடை**<br>செய்தி உருவாகும் வரலாறு<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>தொகாநிலைத்தொடர்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | காவடிச் சிந்துக்கு உரிய இசையோடும் இசைவு தோன்றவும் கற்பித்தல் – கற்கச் செய்தல் ; செய்தி உருவாகும் வரலாற்றை வரலாற்று முறையில் கற்பித்தல் ; குறிப்புகள் கொடுத்து விரிவாக எழுதச் செய்தல். |
| 6. | உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல்.<br>நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும், சுவைபடவும் கூறுதல், எழுதுதல் | **இயல் – 6**<br>**செய்யுள்**<br>திருமந்திரம், தேம்பாவணி<br>**உரைநடை**<br>நாடகக் கலை<br>**துணைப்பாடம்**<br>வீதி நாடகம்<br>**இலக்கணம்**<br>ஆகுபெயர்<br>**மொழித்திறன் பயிற்சி** | திருமந்திரத்தின் உட்பொருள் வெளிப்படுமாறு கற்பித்தல். தேம்பாவணியின் நயம் வெளிப்படக் கற்பித்தல் – கற்கச் செய்தல்; நாடகக் கலை வளர்ச்சியைச் சுவையாகக் கூறுதல் – கூறச் செய்தல்; வீதி நாடகம் நிகழ்த்துதல்.<br>வாழ்க்கையிலிருந்து உரிய |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | | எடுத்துக்காட்டுகள் தந்து ஆகுபெயரைக் கற்பித்தல். மாணாக்கரை எடுத்துக்காட்டுகள் தொகுத்துவரச் செய்தல். |
| 7. | பல்துறை அறிவு பெறுதல். (சித்த மருத்துவம், விளையாட்டு, இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் ...) புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல், மனித உறவுத் திறன் அறிதல் | **இயல் – 7**<br>**செய்யுள்**<br>திருக்குறள், திருவருட்பா<br>**உரைநடை**<br>தமிழர் வானியல்<br>**துணைப்பாடம்**<br>கலீலியோ கலீலி<br>**இலக்கணம்**<br>வேற்றுமை<br>**மொழித்திறன் பயிற்சி** | திருக்குறள் கருத்துகளை மாணாக்கர் உளங்கொளத்தக்க வாழ்வியல் நிகழ்வுகள் – கதைகள் – சான்றோர் வாழ்க்கை வரலாறுகள் கூறிக் கற்பித்தல் ; உரைநடைப் பாடத்தின் வழிப் புதிய சொற்கள் – பொருள் கலைச்சொற்கள் முதலானவற்றை இனங்காணச் செய்தல் – தொகுக்கச் செய்தல். விதி வருமுறையில் வேற்றுமை இலக்கணம் கற்பித்தல். |
| 8. | மொழி நயம் அறிதல். (உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒரு சொல் அறிதல்) | **இயல் – 8**<br>**செய்யுள்**<br>வில்லிபாரதம், முடியரசன் பாடல்<br>**உரைநடை**<br>தேவநேயப் பாவாணர்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை | இந்த இயலின் செய்யுட் பகுதியை முறையாகக் கற்பிப்பதோடு, அவற்றுடன் கருத்துத் தொடர்புடைய உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் முதலானவற்றைக் கற்பித்தல், மாணாக்கரைத் |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | **இலக்கணம்**<br>புணர்ச்சி – இயல்பு, விகாரம்<br>**மொழித்திறன் பயிற்சி** | தொகுக்கச் செய்தல், உரைநடைவழி ஒரு சொல் பலபொருள், பல பொருள் ஒரு சொல் காணும் பயிற்சியளித்தல். இயல்பு – விகாரப் புணர்ச்சிக்குரிய எடுத்துக்காட்டுகளைப் பாடநூலிலிருந்து எடுத்துக்காட்டச் செய்தல். |
| 9. | சொற்களஞ்சியம் பெருக்குதல் | **இயல் – 9**<br>**செய்யுள்**<br>கம்பராமாயணம்,<br>பாரதிதாசன் பாடல்<br>**உரைநடை**<br>காட்டுயிரிகள்<br>**துணைப்பாடம்**<br>அருங்காட்சியகம்<br>**இலக்கணம்**<br>புணர்ச்சி – உயிரீறு, மெய்யீறு<br>**மொழித்திறன் பயிற்சி** | காப்பிய நயம், கவிநயம், வெளிப்பட இராமாயணத்தைக் கற்பித்தல், பாவேந்தரின் கவியுள்ளம் வெளிப்படுமாறு பாடலைக் கற்பித்தல். உரைநடை, துணைப்பாடக் கட்டுரையின் துணையுடன் சொற்களஞ்சியப் பெருக்கப் பயிற்சியளித்தல், இலக்கணப் பகுதியை முன் பகுதியில் சுட்டிய முறையில் கற்பித்தல் – அவ்வாறே கற்கச் செய்தல். |
| 10. | நயம் பாராட்டுதல், படைப்பாற்றல் | **இயல்–10**<br>**செய்யுள்**<br>முத்துக்குமாரசுவாமி<br>பிள்ளைத்தமிழ் | செய்யுளை ஓசைநயம் வெளிப்படக் கற்பித்தல் – கற்கச் செய்தல். நயம் உணர்த்தல். இதுவரை |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | **உரைநடை**<br>இலக்கியத்தில் நகைச்சுவை<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>யாப்பிலக்கணம்,<br>அணியிலக்கணம்<br>**மொழித்திறன் பயிற்சி** | கண்ட செய்யுட் பகுதிகளுக்கான நயங்களை மாணாக்கரே தொகுக்கப் பயிற்றுதல்.<br>உரைநடையைக் கற்பித்த பிறகு நகைச்சுவைத் துணுக்குகள் படைக்கச் செய்தல்.<br>யாப்பு, அணி – இலக்கணப் பகுதிகட்குப் பாடநூலிலுள்ள செய்யுட் பகுதிகளின் துணையுடன் கற்பித்தல் – கற்கச் செய்தல். |